1973 நவம்பர் 20]

கிடைக்கின்றன என்றும், இவையும் மற்ற மலைகளிலும், மற்ற இடங்களிலும் கிடைக்கும் மூலிகைகள்தான் என்பதால் தனியாக அந்த மலைப்பகுதி சிறப்பு மூலிகைக்குரிய இடம் என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும் ஏதாவது மூலிகைகள் கிடைத்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தலைவரவர்களே, இந்த மூலிகை ஆராய்ச்சியிலே பலன் அதிகம் கிட்டாது என்று சொன்னார்கள், அந்த ஆராய்ச்சியை யார் நடத்தினார்கள்? முறைப்படி அலோபதி மருத்துவர்களால் நடத்தப்பட்டதா அல்லது சித்த வைத்தியர்களால் நடத்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட ஆராய்ச்சியில் அலோபதி மருத்துவர்களாகயிருந்தாலும், சித்த வைத்தியர்களாக இருந்தாலும், தாவர நூல் அறிஞர் துணை கொண்டே ஈடுபட வேண்டும். 'பொட்டானிகல் சயின்ஸ்'-ல் பயிற்சி பெற்ற, தாவர நூல் பயிற்சி பெற்ற துணைப் பேராசிரியர் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியில் இருக்கிறார், அவரோடு சித்த மருத்துவர்களும் இணைந்து, கிடைத்த மூலிகைகளைப் பரிசீலித்திருக்கிறார்கள்.

மதுரைக்கு இந்திய முறை மருத்துவ மனை

*** 206 வினா—திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் பெரிய அளவில் இந்திய முறை மருத்துவ மனை ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு பெண் மருத்துவர்கள்

*** 207 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிரதம சுகாதார நிலையங்களில் பணியாற்றும் இரு மருத்துவர் பதவிகளுள், ஒரு பதவிக்குப் பெண் மருத்துவரையே நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொதுவாக பிரதம சுகாதார நிலையம் ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதவி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் பொதுப் பிரிவிற்கும் மற்றொருவர் கிராமக் குடும்பக்கட்டுப்பாடு பிரிவிற்கும் ஆவர். கிராமக் குடும்பக் கட்ட்டுப்பாடு பிரிவு அலுவலர் இடங்கள் பொதுவாக பெண் மருத்துவர்களால் நிரப்பப்படும். ஆனால் பெண் உதவி மருத்துவர்கள் கிடைக்காத காரணங்களால் ஆண் உதவி மருத்துவர்கள் சில ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள கிராமக் குடும்ப கட்டுப்பாடு பிரிவுகளில் நியமிக்கப்பட்டனர். இப்பிரிவுகளில் இருந்து வரும் ஆண் உதவி மருத்துவர்களுக்குப் பதிலாக பெண் உதவி மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, கிராமங்களில் மகப்பேறு போன்றவற்றைக் கவனிப்பதற்கும், குடும்பக் கட்டுப்பாடு போன்றவற்றைக் கவனிப்பதற்கும் எப்படியும் இரண்டு மருத்துவர்களில் ஒருவரைப் பெண் மருத்துவராக நியமிக்கலாம். இனியாகிலும் அப்படி நியமிக்கும் நேரத்தில் பெண்களை அதிகமாகத் தேர்ந்தெடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பெண்களுக்கு என்று சிறப்பான உரிமையும் இருக்கிறது. அதேபோல பெண்களுக்கு என்று தனியான தொல்லைகளும் இருக்கின்றன. படிக்கின்ற பெண்கள் அத்தனைபேரும் வேலைக்கு வர விரும்புவதில்லை. மேலும் நியமிக்கப்பட்ட இரண்டு மூன்று ஆண்டுகளில் இரண்டு மூன்று மாத காலத்திற்கான விடுமுறையை—ஆண்கள் பெறாத விடுமுறையை, பெண்களுக்கே உரிய விடுமுறையை—அவர்கள் பெறுவதால் பெண் டாக்டர்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, பல பெண் மருத்துவர்கள் தேர்ச்சி பெற்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் அப்ளை செய்தும் வேலை கிடைக்கவில்லை. இந்த பிரைமரி ஹெல்த் சென்டர்களில் போட வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது. போடுவதற்கு பெண் உதவி மருத்துவர்கள் கிடைக்கவில்லை என்று அமைச்சரவர்கள் கூறுவதற்குப் பதிலாக அவர்களைப் போட முன்வருவார்களா? அதுமட்டுமல்லாமல், திருமணமான

1973 நவம்பர் 20]

பெண்களாகயிருந்தால், கணவர் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டரிலும், மனைவி மற்றொரு மருத்துவ மனையிலும் இருக்கிறார்கள். அவர்களை இணைத்துப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் நல்வாழ்வுத் துறையிலே அமைச்சராகயிருந்த காலத்தில் இருந்தே டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்றால் ரெஜிஸ்ட்ரேஷன் டேட் படி நியமிக்க வேண்டுமென்ற முறையிருக்கிறது. மேலும், வேலைக்குப் பதிவு செய்துகொண்டவர்களில் ஆண்கள் 500 பேர்களும், பெண்கள் 127 பேர்களுமாகப் பெண்கள் பதிவு குறைந்து போயிருக்கிறது. அந்த வரிசைப்படி போட ஆரம்பித்தால் ஆண்களைத்தான் பத்தில் எட்டு பேர்களாக நியமிக்க வேண்டிய நிலையிருக்கிறது. கடந்த காலத்தில் 100 பெண்களைத் தனியாக அரசாங்கத்தின் அனுமதி பெற்று நியமித்தோம். ஆனால் ஆண் டாக்டர்கள், எங்கள் வாய்ப்பைத் தவிர்க்கக்கூடாது என்று வலியுறுத்துகிறார்கள். மற்றொன்று, கணவனும் மனைவியும் ஒரே யூனிட்டில் பணியாற்றக்கூடாது என்பது அவர்கள் காலத்திலே யிருந்து உள்ள விதியாகும். ஒரே ஊரிலே இருக்கலாமேதவிர, Not in the same Unit. ஒரே பிரைமரி ஹெல்த் சென்டரில் கணவனும், மனைவியும் ஒன்றாக இருக்கக்கூடாது. அப்படி ஒரே ஊரிலே இருந்தாலும் ஒரே மருத்துவ மனையில் இல்லாமல் வெவ்வேறு மருத்துவ மனைகளில் பணியாற்ற வேண்டுமென்றுதான் முறையிருக்கிறது. அதை மாற்ற முடியுமா என்பதுபற்றி நிலைமைகளையொட்டித்தான் பரிசீலிக்க வேண்டும்.

பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

* 208 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம்—பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டட வேலை எப்போது முடிவடையும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?